1987 ஏப்ரல் 22]

குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் துணை மின்நிலையம்.

457—(*வினா எண்· 12388) திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி இலுப்பூர் நகரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்மிபுகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1987—88-ம் ஆண்டு இறுதிக்குள் நிறுவப்படும்.

தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம் குறிஞ்சிப்பாடியிலுள்ள புத்துமாரியம்மன் ஆலயம்.

458—(*வினா எண். 13490) திரு. எ. தங்கராசு: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் தாலுக்கா, குறிஞ்சிப்பாடியில் உள்ள புத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சொந்தமான இடம் தனியார் இருவரின் ஆக்கிரமிப்பில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் தாலுகா குறிஞ்சிப்பாடியில் உள்ள புத்துமாரியம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற தொடரப்பட்ட வழக்குகள் கடலூர் மாவட்ட நீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதி மன்றத்திலும் நிலுவையில் உள்ளன.